**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.37/2023**

2025–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.06.2025 | தகப்பனார் பெயர்: | சுந்தரம் |
| பெயர்: | பாலகுமாரன் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி டவுன் | சமயம்: | |
| தொழில்: | விநியோகிப்பாளர் (ஓய்வு) | வயது : | 52/2025 |

**முதல் விசாரணை : 10.06.2025**

நான் இவ்வழக்கின் வாதி. எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபன பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபன பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபன பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. ஸ்ரீருத்ர மகா காளியம்மன் நல சங்க பதிவு சான்றின் அசல் **வா.சா.ஆ.1**

2. 28.08.2022 வாதி சங்க நிர்வாகிகளால் பிரதிவாதியின் மேல் தாக்கல் செய்யப்பட்ட கேவியட் மனு அலுவலக நகல் **வா.சா.ஆ.2**

3. கடந்த 16.09.2022–ம்தேதியிட்ட கேவியட்டிற்கான பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.3**

4. 27.01.2023–ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு கொடுத்த பதில் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.4**

5. 2022–ம் வருடம் தீ மிதி உற்ச்சவ பத்திரிக்கையின் அசல் **வா.சா.ஆ.5**

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.